**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கந்தர்வக்கோட்டை**

முன்னிலை: **திரு.நா.சிவபழனி, B.A., B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 07 ஆம் நாள் சனிக் கிழமை,

**குற்றவியல் பல்வகை மனு எண். 116/2026**

**பட்டியல் வழக்கு எண்.239/2019**

1. பெருமாள்
2. ஆறுமுகசாமி ..... மனுதாரர்கள்/எதிரிகள்

/எதிராக/

கருணாநிதி .... எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

இம்மனுவானது இந்நீதிமன்றத்தால் 16.02.2026 ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு , இன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது , மனுதாரர்கள் / எதிரிகள் தரப்பில் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.M.ஜெயந்தன், B.Sc., B.L.,** அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் / குற்றமுறையீட்டாளர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.V.S.முருகேசன், B.A., B.L.,** அவர்கள் ஆஜராகியும் , இரு தரப்பு வாதம், வழக்காவணங்கள் பரிசீலித்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

1. இம்மனுவானது பிரிவு 311 குவிமுச வின் கீழ் ம.சா.1 ஐ மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இம்மனுவானது , எதிர்மனுதாரர் / எதிரி தரப்பில் அசல் வழக்கில் புகார்தாரர் தரப்பில் ம .சா.1 ஐ சாட்சியாக விசாரிக்கப்பட்டு பகுதியாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளதாகவும், கடந்த 31.01.2026 ம் தேதியன்று வாய்தா ஏற்பட்டிருந்ததாகவும், அன்றைய தினம் மனுதாரர்கள் / எதிரிகளுக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டுவிட்டதாகவும், அன்றைய தினம் ம.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்ய இயலவில்லை என்றும் , அதனால், எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்பட்டுள்ளதாகவும் , மேற்படி தவறு வேண்டுமென்று ஏற்படவில்லை

என்றும், எனவே ம.சா.1 மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையில் , ம.சா.1 ஏற்கனவே குறுக்கு விசாரணை செய்யப்பட்டுவிட்டதாகவும் , வழக்கை காலதாமதப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும் , மனுதாரர்களுக்கு உடல்நிலை சரியில்லை என்று வெறுமனே கூறியுள்ளதாகவும் , அதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும் , எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

4. வழக்காவணங்களை கண்ணுற்றதில், இவ்வழக்கின் மனுதாரர்கள்/எதிரிகள் தரப்பில் ம.சா.1 கடந்த 11.12.2023ம் தேதியன்று குறுக்கு விசாரணை செய்யப்பட்டு , வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கினங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அதன் பிறகு பல வாய்தாக்கல் கொடுக்கப்பட்ட பின்னரும் ம.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்யாததால் ம.சா.1 இன் சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மனுதாரர்கள் / எதிரிகள் தரப்பில் ம .சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்ததால் தான் வழக்கின் உண்மை நிலையை தெரிய வரும் என்று குறிப்பிட்டுள்ளதாலும், எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவை அனுமதிக்க ஆட்சேபணை செய்யப்பட்டிருப்பினும், மனுதாரர்களுக்கு அவர் தரப்பு வழக்கை நிரூபிக்க போதிய வாய்ப்பு அளிக்க வேண்டியது அவசியம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது . அவ்வாறு இம்மனுவை அனுமதிக்க மறுக்கும் பட்சத்தில் மனுதாரர்களுக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டதாகி விடும் என்பதால் நீதியின் நலன் கருதி இம்மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**5. இறுதியாக, ம.சா.1 இந்நீதிமன்றத்தில் ஆஜராகும் தேதியன்றே அவரை குறுக்கு விசாரணை செய்ய வேண்டும். மனுதாரர்கள் / எதிரிகள் ம.சா.1க்கு ரூ.1000/- செலவுத்தொகையாக வழங்க வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் இம்மனு அனுமதிக்கப்படுகிறது.**

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 07.03.2026 இன்று இவ்அவையறிய பகரப்பட்டது.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:24:20 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், கந்தர்வக்கோட்டை.**

**இரு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:** இல்லை

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:24:23 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், கந்தர்வக்கோட்டை.**